# ஆறாவது இந்தியா-ஆஸ்திரேலியா கடல்சார் பாதுகாப்பு கலந்துரையாடல்

*ஆகஸ்ட் 13, 2024*

*1. ஆறாவது இந்தியா-ஆஸ்திரேலியா கடல்சார் பாதுகாப்பு கலந்துரையாடல் ஆகஸ்ட் 13, 2024 அன்று கான்பெராவில் நடைபெற்றது . இந்தியப் பிரதிநிதிகள் குழுவை வெளிவிவகார அமைச்சகத்தின் ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்களுக்கான கூட்டுச் செயலாளர் திருமதி. முவான்பூய் சாயாவி அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் அவுஸ்திரேலியப் பிரதிநிதிகள் குழுவை வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் வர்த்தகத் துறையின் தெற்கு ஆசியா மற்றும் மத்திய ஆசியா பிரிவின் முதல் உதவி செயலாளர் திருமதி. சாரா ஸ்டோரி மற்றும் பாதுகாப்புத் துறையின் சர்வதேச கொள்கைக்கான முதல் உதவி செயலாளர் பெர்னார்ட் பிலிப் ஆகியோர் தலைமை தாங்கினார்.*

*2. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் உலகளாவிய நல்வாழ்வுக்கு உகந்த பாதுகாப்பான கடல்சார் சூழலை பராமரிப்பதற்கான வழிகள் குறித்து இருதரப்பும் ஆலோசித்தன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு சூழல், கடல்சார் துறையில் விழிப்புணர்வு, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) ஒருங்கிணைப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு ஈடுபாடுகள் மற்றும் கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல் உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு விஷயங்கள் குறித்து அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். தேடல் மற்றும் மீட்பு (SAR), மாசு எதிர்ப்பு, நீலப் பொருளாதாரம் மற்றும் துறைமுக அரசு கட்டுப்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பு என்பது இதில் அடங்கும். இந்தத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து அவர்கள் விவாதித்தனர். இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்முயற்சியின் (IPOI) கடல்சார் சூழலியல் தூணில் ஒத்துழைப்புக்கான முன்னோக்கி செல்லும் பாதை குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.*

*3. இந்த பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டத்தை புதுதில்லியில் இரு தரப்பிற்கும் வசதியான தேதியில் நடத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.*

**புது தில்லி**
***ஆகஸ்ட் 13, 2024***